★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

செய்யக்கூடாதன ஐந்து

அகமதாபாத், ஏப். 26—

பலாத்காரச் செயல்களில் ஈடுபடாதே; திருடாதே; கற்பழிக்காதே; மதுவருந்தாதே; பிச்சையெடுக்காதே;—என்ற ஐந்து கோட்பாடுகளையும் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என்ற, 'வகாரிகள்' என்ற ஒரு நாடோடிப் பழங்குடி மக்கள் கூட்டத்தவர் முடிவு செய்திருக்கின்றனராம்.

இங்கிருந்து 15 மைல் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றில் இந்த மக்கள் மாநாடு ஒன்று கூட்டியபோது அங்கு அவர்க

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: சித்திரை 16உ சனி (28—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 17உ ஞாயிறு (29—4—56) [இதழ் 271

'மந்திரிகளுக்கு எதிராக முழக்கமிட எவருக்கும் உரிமை உண்டு'

'மான நஷ்ட வழக்குத் தொடுக்க வேண்டியவர்கள் மந்திரிகளே'

'பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் வழக்குத் தொடுத்திருக்கக்கூடாது'

பஞ்சாப் அரசாங்கத்திற்கு இந்திய உயர் நீதிமன்ற இடித்துரை

"இழிவான முழக்கமிடுவது வெறுக்கத்தக்கதாகும். தங்களுக்குள்ள மனக்குறையை கண்ணியமான வகையில் வெளிப்படுத்த அவர்களுக்கு உரிமை உண்டு."

"இந்த வழக்கில் உள்ள சிக்கல் எல்லாம், அவர்கள் செய்த குற்றத்திற்காக, அரசாங்க அதிகாரிகள் தவருக உணர்ந்து கொண்ட பரிகாரமுறை பற்றியதேயாகும். அவர்கள் முழக்கமிட்டது முதல் மந்திரிக்கும், போக்குவரத்து மந்திரிக்கும் மான நஷ்டத்தை விளைவிக்கக் கூடியதேயாகும். அதற்காக பரிகாரம் தேடவேண்டியதும் அவர்களேயாகும். அவர்களுக்காக, அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்பு சட்டம் 9–வது விதியின் கீழ், குற்றவாளிகளைப் பழிவாங்க முன்வந்தது முறையாகாது."

"மேற்படி இழிமொழிகளைக் குறித்து தாக்குண்ட மந்திரிகள் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. இத்துறையில் அவர்கள் மேற்கொண்ட போக்கு, மக்களாட்சி மாண்புக்கு ஒத்ததாக இருக்கிறது."

"அவ்வாறு முழக்கமிட்டது, பஞ்சாப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குற்றமானதுதானு என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்ட அரசாங்க சார்பில், அவ்வாறு முழக்கமிட்டது, அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடக் கூடிய அபாயத்தையோ, அன்னியநாடுகளுடன் இருக்கும் நட்புக்குக் கேடு சூழ்வதையோ, ராஜ்ய பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிப்பதையோ உள்ளடக்கமாகக் கொண்டிருக்கவில்லை என விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது."

"எனவே, பஞ்சாப் பாதுகாப்புச் சட்டம் 9-வது விதிப்படி அவர்களைக் குற்றவாளிகள் எனக்கொண்டு தண்டிப்பதற்கு நியாயமில்லை, ஆதலால் அவர்களை விடுதலை செய்கிறேன். அவர்களும், அவர்கள் செயல்பற்றி கூறப்பட்டதை ஒரு படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்தில் நடந்து கொள்ள வேண்டும்."

—இவ்வாறு, பஞ்சாப் மந்திரிகளுக்கு எதிராக முழக்கமிட்டதற்காக தண்டிக்கப்பட்ட வழக்கில், இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி பகவதி அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்.

பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்க வேண்டும் என்ற பஞ்சாப் அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக, அமிர்தசரஸ் மாவட்ட பஸ் சங்கத்தின் சார்பில் கர்த்தார் சிங் என்பவரும், மற்ற இருவரும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர் ஆர்ப்பாட்டம் செய்யும்பொழுது அவர்கள் மூவரும், அப்பொழுது முதல் மந்திரியாக இருந்த 'சச்சார் (கழுதை) ஒழிக' என்றும், போக்குவரத்து மந்திரியாக இருந்த 'ஜகத் நாராயணன் ஒழிக' என்றும் முழக்கமிட்டனர்.

அவ்வாறு முழக்கமிட்டது, 1953-ம் ஆண்டைய பஞ்சாப் ராஜ்ய பாதுகாப்பு சட்டத்தின் 9-வது பிரிவின்கீழ் குற்றமாகும் என அவர்கள்மீது, அரசாங்கச் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது.

அவர்கள் அவ்வாறு இழிவாகக் கூச்சலிட்டது, இராஜ்யத்திற்கு ஆபத்தையும், அமைதி, ஒழுங்கிற்குக் கேட்டையும் தருவதாகும் என்பதும் குற்றச்சாட்டு.

அவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கை முதல்முதலாக விசாரித்த முதல் வகுப்பு மாஜிஸ்திரேட், அவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து, ஒவ்வொருவருக்கும் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை கொடுத்தார்.

தண்டனைக்கு எதிராக, அவர்கள், செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்தனர். அங்கும் கீழ் நீதிமன்றத்தின் தண்டனை உறுதி செய்யப்பட்டு விட்டது. அதன் பிறகு, அவர்கள், உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொண்டனர்; அங்கும் அவர்கள் அப்பீல் மனு தள்ளப்பட்டு விட்டது.

பஞ்சாப் இராஜ்ய பாதுகாப்பு சட்டம் 9-வது பிரிவின்கீழ் தாங்கள் குற்றவாளிகள்தானு என்ற ஒரு சட்ட விளக்கப் பிரச்னையில் முடிவு கூறும்படி இந்திய உயர்நீதிமன்றத்திற்கு, அவர்கள் வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கை விசாரித்த நீதிபதி, தலைப்பில் குறிப்பிட்டுள்ளபடி தீர்ப்பளித்து, குற்றவாளிகளை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சம்பவக் குவியல்

கடப்பையிலிருந்து கர்னூலுக்கு 60 வயதடைந்த மூதாட்டி ஒருத்தி, உச்சி வெய்யலில் பஸ்ஸில் பிரயாணம் செய்தாள். அவள் சூரிய வெப்பத் தாக்குதலுக்கு பலியாகி இறந்தாள்.

* * *

அடுத்த மாதம் கொண்டாட இருக்கிற புத்தர் ஜயந்தியின் நினைவாக, சிலோன் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் 600 கைதிகளை விடுவிக்க அரசாங்கம் யோசித்து வருகிறது. இதுபற்றி இவ்வாரத்தில் இறுதியாக முடிவு செய்யப்படுமாம்.

* * *

ஜூன் 9-ந் தேதி அகில இந்திய காங்கிரஸ் சார்பில் ஒரு 'இளைஞர் மாநாடு' கூட்டப்படும். இரண்டு நாட்களுக்கு மாநாடு நடைபெறும். மாநாட்டை தேபர் துவக்கிவைப்பார்

* * *

நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணப் பட்டினத்தில், ஒரு சிறிய துறைமுகம் ஜூன் 26-ல் துவக்கப்படும். ஆந்திராவின் ஆறுவது சிறிய துறைமுகமாகும் இது. இதனுடைய அபிவிருத்திக்கு இரண்டாவது திட்டத்தில் ரூ. 27 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

* * *

அகில இந்திய கதர் கிராம கைத்தொழில் நிறுவனம், தினம் ஒன்றுக்கு 25 குரோஸ் தீப்பெட்டிகளை உற்பத்திச் செய்யும் தொழில் அமைப்புகளுக்கு பண உதவியும், தொழில் உதவியும் செய்வதென முடிவு கட்டி இருக்கிறது.

* * *

அண்ணு அவர்கள் எழுதியதும், தமிழ் நாட்டில் வெற்றி கண்டதுமான 'வேலைக்காரி' சினிமா படம் இந்தி மொழியில் எடுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வாரக் கடைசியில் புதுடில்லி, கல்கத்தாவிலும், மே 4-ந் தேதி முதல் பம்பாயிலும் காட்டப்படும்.

* * *

ஆந்திராவிற்கு அனேக நீர்த்தேக்கங்கள் தேவைப்படுகின்றன விசாலாந்திர அமைப்பின் காரணமாக, கோதாவரி தண்ணீரை அவ்வகையில் பயன் படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதுவுமன்றி, ஆந்திரா பயன்படுத்தியதுபோக எஞ்சியுள்ள கோதாவரி தண்ணீரை, சென்னை மாகாணத்திலும் சில பகுதிகளுக்குப் பயன்படுத்த உதவமுடியும் என ஆந்திர துணை முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியார் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

சென்னை அரசாங்கக் கல்வி வெள்ளை அறிக்கையை ஆராய நியமிக்கப்பட்டுள்ள சட்டசபை ஆய்வுக்குழு ஜூன் மாதத்தில் கூடி ஆராய இருக்கிறது. அதன் சிபாரிசு சட்ட மாக்கப்படுவது, சட்டசபை எப்பொழுதும் கூடும் என்பதைப் பொறுத்து இருக்கிறது. மாகாணச் சீரமைப்பிற்கு முன் சட்டசபை கூடுமா என்பதை நிச்சயமாகக் கூறுவதற்கில்லை என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியும் அறிவித்துள்ளார்.

இந்தியப் பேரரசின்

பரிசீலனையில் இருக்கிறதாம்

பம்பாய், ஏப். 27—

இந்தியா—இலங்கைக்கு இடையேயுள்ள கடற்பகுதியை ஆழப்படுத்துவதற்கான திட்டம் (சேது சமுத்திரத் திட்டம்) இந்தியப் பேரரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது.

தனுஷ்கோடி—தலைமன்னர் இடையே அக்கடற்பகுதியை ஆழப்படுத்துவதின் மூலம் அரபுக் கடல் வழியாக சென்னை, விசாகை, கல்கத்தாவுக்கு வரும் கப்பல்களுக்கு 300 மைல் பயணம் குறையும்; தற்போது சிறிய கப்பல்களும், படகுகளும்தான் அங்கு போக முடிகிறது; பெரிய கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் வருகின்றன.

ரூ. 2 கோடி அல்லவாம்!

ரூ. 8 கோடி வரையில் நஷ்டஈடு கேட்கப்பட்டதாம்

பெங்களூர், ஏப். 25—

கோலார் தங்கவயலை அரசியலார் எடுத்துக்கொண்டால் நஷ்டஈடாக ரூ. 2 கோடி 'கம்பெனி' கேட்டதாக சர்க்கார் கூறுவது தவறு என்றும், ரூ 6 முதல் ரூ 8 கோடிவரை கேட்டதெனவும் சுரங்க நிர்வாக டைரக்டர் கூறியுள்ளாராம்.

தென்னுப்பிரிக்கா மீண்டும் திரும்புகிறது!

கேப்டவுன், ஏப். 26—

தென் ஆப்பிரிக்கா மீண்டும் ஐ. நா. வுக்குத் திரும்பிவருமாம்.

சென்ற கூட்டத்தில் ஐ. நா.-விலிருந்து தென் ஆப்பிரிக்கா வெளியேறியது நினைவிருக்கலாம்.

செய்தி அவியல்

மாகாணம் முழுவதிலும் உள்ள பள்ளிகளுக்காக ஏறத்தாழ 10,000 ஏகர் வரை நிலம் நன்கொடையாக வழங்கப்பட்டு இருக்கிறது. அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை ஆராய்ந்து அறிய நியமிக்கப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் குழு தனது முடிவை அறிவித்துவிட்டது; அதாவது பள்ளிக்கூடங்களை ஒட்டியுள்ள நன்கொடை நிலங்களை, மாணவர்களுக்குப் பயிற்சி தரும் விவசாயப் பண்ணைகளாகப் பயன்படுத்த வேண்டும் என்றும், தொலைவில் இருக்கும் நிலங்களை, குத்தகைக்கு விட்டு, அவைகளில் கிடைக்கும் வருவாயைக்கொண்டு பள்ளிகளின் நிர்வாகச் செலவிற்கு ஈடு செய்யவேண்டும் என்றும் குழு சிபாரிசு செய்திருக்கிறது. இத்தகவலை வெளியிட்ட படிப்பமைச்சர் சுப்பிரமணியம், அந்நிலங்களில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு கொடுக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

★

மந்திரிகள், குறிப்பிட்ட சாதியினர் அல்லது வகுப்பினர்களுடைய நிறுவனங்கள் சம்பந்தமான காங்கிரஸ் விழாவில் கலந்துகொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்வதாகவும், பிரதம மந்திரி நேருகூடக் காஷ்மீர் பண்டிதர்கள் மாநாட்டில் கலந்துகொண்டதாகவும், முதல் மந்திரி அவர்களின் நடத்தையைத் தாம் குறை கூறுவதாகக் கருதக்கூடாது என்றும் ஆனால் முதல் மந்திரியார் செய்யும் ஒவ்வொன்றும் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கிறதென்றும், ஏப்ரல் 27-ந் தேதியன்று பாராளுமன்றத்தில் நிதி மசோதா குறித்து ஜே. என். கபூர் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

'திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் இப்போது வேலை பார்த்து வரும் தமிழர்கள், கேரள ராஜ்யம் அமைந்தவுடன், அவர்கள் விரும்பும்போல் சென்னை ராஜ்யத்தில் வேலை கொடுக்கப்படுவார்களா?' என்று பத்திரிகை நிருபர் கேட்ட கேள்விக்கு திரு—கொச்சி மாநில ஆலோசனையாளர் திரு பி. எஸ். ராவ் பதிலளிக்கையில், அவர்களின் முழு விருப்பம்போல் வேலை கொடுக்கப்பட மாட்டார்களென்றும், ஆனால் அவர்களுடைய விருப்பம் கவனிக்கப்படும் என்றும், எல்லாத் தமிழ் ஊழியர்களையும் இழக்கத் தாம் விரும்பவில்லையென்றும் குறிப்பிட்டார்.

★

திருமதி அம்மு சுவாமிநாதன் மாகாணச் சீர்திருத்த மசோதா சம்பந்தமான கூட்டுப் பொறுக்குக் குழுவில் பெண்கள் சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டு, அந்தக் குழுவில் தாம் இருந்து பணியாற்றுவதை தமக்கு விரோதமாகும் என்று தெரிவித்தார் என்பதாக உள்நாட்டு மந்திரி பண்டித் பந்த் தெரிவித்தார்.

தாண்டானூர் தோழர்களுக்கு சிறைவாசம்

பிப். 20 அர்த்தால் வழக்கில் தீர்ப்பு

பிப். 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தாலை ஒட்டி தாண்டானூர் தோழர்கள் துளசி, மாணிக்கம் இருவர்மீதும் ஆத்தூர் 'சப்-மாஜிஸ்திரேட்' நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றது.

25-ந் தேதியன்றும் வழக்கு நடைபெற்றது.

26—4—56-ல் இரு தோழர்களுக்கும் ரூ 5 அபராதம்—கட்ட மறுத்தால் 5 தினங்கள் சிறைவாசம் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து மகிழ்ச்சியோடு சிறை புகுந்தனர்.

வழக்கைக் கவனிப்பதற்காக தி. மு. க. தோழர் பி. எம். ரெங்கசாமி, கே. எஸ். மணி, காச்சிமுத்து, எம். இராமச்சந்திரன் ஆகியவர்களும், மற்றக் கழகத் தோழர்களும், பொதுமக்களும் நீதிமன்றத்தில் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—4—'56 சனி

அம்பர் இராட்டை!

ஒருவர் கையினல் நூற்கப்படும் நூலின் அளவைக் கூட்டுவதற்காக அம்பர் இராட்டை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட சில மணிகளில் வழக்கத்திலிருந்துவரும் சாதாரண இராட்டையில் நூற்கப்படும் நூலின் அளவைக்காட்டிலும், அதே சில மணிகளில் புதிய அம்பர் இராட்டையில் கூடுதலான நூல் நூற்க முடியும் எனக் கூறப்படுகிறது.

அம்பர் இராட்டையின் செயல் திறத்தைப் பெருக்குவதற்காக இன்னமும் முயற்சிக்கப்பட்டு வருகிறது. அதன் முடிவு தெளிவாகக் கண்டறியப்படுவதற்குள்ளாகவே, அதை மையமாக வைத்து வேலையற்றோர் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதற்கான ஒரு திட்டமும் தீட்டப்பட்டுவிட்டது.

அம்பர் இராட்டை திட்டத்திற்காக, அடுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எண்பது கோடி ரூபாய் ஒதுக்குவது எனக் கருதப்பட்டு இருக்கிறது. அவ்வகையில் திட்டத்தின் முதலாண்டில் மட்டும் பதினைந்து கோடி ரூபாய் செலவிட திட்டமிடப் பட்டிருக்கிறது.

அம்பர் இராட்டையின் விளைவுபற்றி முடிவு தெரிவதற்கு முன்னதாகவே, அதைத் தீவிரமாகச் செயலாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதும், அதற்கென கோடிக்கணக்கில் பணம் செலவிடத் துணிவதும், பிரதமர் நேரு ஆட்சியின் விசித்திரமேயாகும். அதைக் காட்டிலும் விசித்திரம், அம்பர் இராட்டையின் நூல் உற்பத்தியை நம்பி, ஆலைக் கதிர்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கவேண்டும் எனப் பெருமுயற்சி செய்வது!

கை இராட்டையும், அதில் உற்பத்தி செய்யப்படும் நூலைக்கொண்டு நெசவு செய்து உருவாக்கப்படும் கதராடையும், கைநெசவுத் தொழிலின் துவக்கத்தைக் குறிப்பிடுவதாகும். அத்துவக்கக் கட்டத்தை உதைத்துத் தள்ளிவிட்டு, நெசவுத் தொழில் துறை பலநூறு மடங்கு முன்னேறி வந்திருக்கிறது. இவ்வளவு முன்னேற்றத்திற்குப் பிறகும் கையால் நூல் நூற்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை வளர்க்கவும், அதற்கு கிராமக் கைத்தொழில் எனப் பெயர் கொடுத்து, வேலையற்றோர் பிரச்சினையைத் தீர்க்க அதை மேற்கொள்ளத் துடிதுடிப்பதும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

ஆட்சி ஆங்கிலேயரிடம் சிக்கிக்கிடந்த நேரத்தில், கையால், நூல் நூற்பது என்பது பலருக்கு வேலைதரும் அருமையான சாதனமாக இருந்திருக்கலாம். அதையே, சுயாட்சியிலும் கட்டிக்காத்து வளர்க்கத் தீவிரமாக முயலுவது, அறிவுடைமையாகாது.

கைராட்டையும், கதராடையும், அக்காலத்தில் பலருக்கு வேலையளிக்க உதவியது எனக்கூறுவதைக் காட்டிலும், காங்கிரஸ் கட்சியின் அரசியல் துறைக்கு பெரிதும் ஆக்கமளித்தது எனக் குறிப்பிடுவதே பொருத்தமானதாகும். அரசியல் நிலைமை மாறிவிட்ட பிறகு கைராட்டை—கதராடை ஆகிய இரண்டையும் கண்காட்சி சாலைக்கு அனுப்பி இருக்க வேண்டியதுதான் நியாயமாகும். அதைச் செய்வதை விடுத்து, அதை ஒரு சிறந்த பொருளாதாரத் திட்டமாக மதித்து தீவிரமாகச் செயலாற்ற முனைவது, எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று.

காந்தியார் கண்டெடுத்த குண்டுமணி கைராட்டை என்றால், அந்தப் பழைய கைராட்டை உற்பத்தி அளவோடு திருப்திபட்டிருக்க வேண்டும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள். அதுவுமன்றி, சாதாரண கைராட்டையைவிடக் கூடுதலான உற்பத்தி செய்யக் கூடிய அம்பர் இராட்டை போன்ற ஒரு நூற்புக் கருவியைத் தேடாது இருக்க வேண்டியதுதான் முறையாகும். ஆனால் காங்கிரஸ் கட்சியினரோ, காந்திய வழியைவிட்டு விலகி, அம்பர் இராட்டைக்குத் தாவ முயலுகிறார்கள்.

இத்தகு மாறுதல் விழையும் போக்கிற்கு என்ன காரணம்?

வழக்கத்தில் உள்ள கைராட்டையில் நூற்கும் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய கூலி, அவருடைய வயிற்றையும் முழு அளவில் நிரப்புவதாக இல்லை. எனவே, அவருக்கு மேலும் கொஞ்சம் கூலி கூடுதலாகக் கிடைக்க, ஒரே மணி அளவில் அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய ஒரு கருவி தேவையாகிறது. அந்த எண்ணத்தின் விளைவுதான் அம்பர் இராட்டையின் தோற்றம்.

ஒரு தொழிலாளியின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்க வேண்டும் என்ற அதிதீவிர எண்ணத்தின் விளைவுதான், இயந்திர வளர்ச்சி. இயந்திர வளர்ச்சி அனைத்துக்கும் அப்பெரும் நினைப்புத்தான் அடிப்படை.

அதன்படி பார்க்கும் பொழுது, கைராட்டையைக் கைவிடவேண்டும் என்ற முடிவிற்கு வந்ததற்கும், கொஞ்சம் கூடுதலாக உற்பத்திச் செய்யக் கூடிய அம்பர் இராட்டைக்குத் தாவியதற்கும், அதே நினைப்புத்தான் காரணம் என்பது விளக்கமாகும்.

அதே நினைப்பின்படி அம்பர் இராட்டையை ஒழித்துவிட்டு, அதிலும் கூடுதலான உற்பத்திச் செய்யக்கூடிய வேறு ஒரு இராட்டையை உடனடியாக மேற்கொள்ளக் கருதுவதும், அந்நினைப்புக்கு ஒத்ததேயாகும்.

கைராட்டையைச்சுற்றி கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கிட்டாது அவதிப்படும் ஒருவன், அம்பர் இராட்டையைச் சுற்றி அரை வயிறு அளவு மட்டும் உண்டால் போதும் என முடிவு கட்டுவதுபோல் இருக்கிறது, அம்பர் இராட்டை ஆதரவாளர்களான காங்கிரஸ் கட்சியினரின் போக்கு. அவன் கையில், அம்பர் இராட்டையிலும் ஆற்றல் மிக்க வேறு இராட்டையைக் கொடுத்து, அவனை வயிறு நிரம்ப உண்ணச் செய்து, வாழ்வின் சுவையை அனுபவிக்கச் செய்யவேண்டுமே என்பதில் அவர்களுக்கு அக்கறை இருப்பதாகக் காணோம். அத்தகு அக்கறை அவர்களுக்கு இருக்குமானால்வேலையில்லாதுத் தவிப்பவர்களிடமெல்லாம் அம்பர் இராட்டையைக் கொடுத்து, அரை பட்டினியில் அவர்கள் அனைவரையும் வதைக்க முன்வருவார்களா? அந்தச் சித்திரவதைத் தொழில் ஏற்பாட்டிற்கென ரூபாய் 80 கோடியைக் கடலில் கரைத்தப் பெருங்காயமாக்கவும் நினைப்பார்களா? துணியத்தான் செய்வார்களா?

தற்காப்பு இலாகா ஊழியர்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு

கல்கத்தா, ஏப். 26—

வரும் மே 21-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென தற்காப்பு இலாகா ஊழியர் சங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்காப்பு இலாகாவில் ஆட் குறைப்பு செய்ய சர்க்கார் திட்டமிட்டிருப்பதை எதிர்த்தே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

வரும் மே 2-ந் தேதியன்று, வேலை நிறுத்தத்திற்கான 'நோட்டீஸ்' தரப்படும் என்று சங்கத் தலைவரான திருமதி மைத்ரேயி போஸ் தெரிவித்திருக்கிறார்.

பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளுவர் என்று தெரிய வருகிறது.

சென்னை மாநிலம் ஒதுக்கப்பட்டதாம்!

இனி தனிக் கவனம் செலுத்த உத்திரவிடப்படுகிறது

புதுடில்லி, ஏப். 26—

பாதுகாப்பு வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது சென்னை மாநிலத்திலும், கிழக்கு இந்தியாவிலும் தனி கவனம் செலுத்துமாறு ஆள் எடுக்கும் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு இலாகா உத்தரவிட்டிருக்கிறதாம். கடந்த காலத்தில் இவ்வேலைகளுக்கு ஆள் சேர்ப்பதில் இப்பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்ததாக பாதுகாப்பு இலாகா எடுத்துக் காட்டியுள்ளதாம்.

சேரிகள் அபிவிருத்திக்கு மத்திய சர்க்கார் திட்டம்

புதுடில்லி, ஏப் 26—

சேரிகளின் முன்னேற்றத் திட்டமொன்றை இந்திய சர்க்கார் தயாரித்திருக்கிறதென்றும், இது மாநில அரசினருக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

மத்திய சுகாதார அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இது பற்றி மக்கள் சபையில் தெரிவிக்கையில் சொன்னார்:—

"மாநில சர்க்கார்களிடம் அவர்களின் தேவைகளைக் குறிப்பிடும்படி கேட்கப்படும். சேரி முன்னேற்றத்திற்கு எந்த மாநில சர்க்காருக்கும் இதுவரை இந்தியப் பேரரசினர் உதவி தர முன்வரவில்லை. ஆந்திரா சர்க்கார் மட்டும் கடனாகவும், மானியமாகவும் பணம் கேட்டிருக்கிறது."

1955 ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையுள்ள காலத்தில் இந்தியாவிலிருந்து மொத்தம் 6,95 400 டன் சணல் தயாரிப்புப் பொருள்கள் ஏற்றுமதியாயின. 1954-ம் ஆண்டில் அதற்குச் சரியான காலத்தில் ஏற்றுமதியானது மொத்தம் 6,52,700 டன்.

வடமொழி வழக்கற்ற சவமொழியாக கிடப்பதில் மகிழ்ச்சியாம்!

அது தேவ பாடையாம்! அதன் எழுத்தும் தேவநாகிரியாம்!

எதற்கும் பயன்படாத அம்மொழியை அனைவரும் கற்க வேண்டுமாம்!

உடுப்பி பண்டார்கார் மடத் தலைவர் வித்யமான்ய தீர்த்த சாமியின் பேராசை!

சென்னை, ஏப். 27—

வழக்கற்று, உயிரிழந்து சவமாகிவிட்ட 'சமஸ்கிருத மொழியை ஏற்றியும் போற்றியும் பேசுவதின் மூலம், அதற்கு உயிரூட்டிவிட நினைக்கிற அநியாய புத்திசாலிகள் இன்னும் இருக்கிறார்கள் என்பது வேடிக்கையானதுதான். ஆனால், தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புகளையும், வசதிகளையும் பயன்படுத்திக் கொண்டு, அளவுக்கு மீறி சவமொழியைப் புகழ்ந்து பேசுவதும், அது செத்துப்போய்விட்டது என்ற உண்மையையே மறைக்கப் பார்ப்பதும் வேதனைக்குரியதாகும்.

நல்லோர் பலரும் சிந்திக்க வேண்டி, ஒரு சவமொழிப் பித்தர், சவ மொழியின் 'அருமை பெருமை'களைக் குறித்து அளந்திருப்பதைக் காணிக்கையாக்குகிறோம் :—

'தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை குறிப்பிடத்தகுந்த மாற்றத்திற்கு எதற்கும் ஆளாகாமல் இருந்துவரும் மொழி உலகத்திலேயே சவ மொழி ஒன்றுதான்; அண்மையில்தான் வளர்ந்த கன்னடம் போன்ற மொழிகள் எல்லாம்கூட அதற்குள் மாற்றங்கள் பலவற்றிற்கு உட்பட்டுவிட்டன. இதற்குக் காரணம், இந்த மொழிகள் எல்லாம் தினசரி வாழ்க்கையில் பயன்படும் மொழிகளாக இருக்கின்றன; அதனால், நாளாவட்டத்தில் உருமாற்றம் அடைந்து விடுகின்றன; ஆனால், சவமொழி எந்தக் காலத்திலும் அன்றாட வாழ்க்கைக்கு உபயோகப்படுத்தப்படும் மொழியாக இருக்கவில்லை; எனவேதான், சவ மொழியின் 'புனிதத் தன்மை' காப்பாற்றப்பட முடிகிறது.

"'காயத்திரி ஜெபம்' செய்யவும், 'சந்தியா வந்தனம்' செய்யவும், ஒவ்வொரு இந்துவும், சவமொழியில் போதுமான அறிவு பெற்றுத் திகழ வேண்டும்.

"சவமொழியை 'தேவ பாஷை' என்று கருதுவர், சவமொழி லிபியைக்கூட 'தேவ நாகிரி' என்றுதான் அழைக்கிறோம்.

"இது என்ன சொல்லுகின்றதென்றால், சவமொழிதான் கடவுளர்களின் மொழி என்பதைத்தான்.

"பெரும் இந்திய தத்துவ, மத நூல்கள் எல்லாம், சவமொழியில்தான் எழுதப்பட்டிருக்கின்றன.

"எவ்வளவுதான் சிறப்பாக இருந்தாலும், மொழி பெயர்ப்புகள், மூல நூல் போல பயனுள்ளவையாயிருக்க முடியாது; எனவே, இந்து தத்துவத்தையும், மதத்தையும் புரிந்துகொள்ள விரும்பும் எவரும், சவமொழியைப் பயிலவேண்டுவது மிக அவசியமான ஒன்றாகும்.

"சவமொழியின் மற்றமோர் சிறப்பான அம்சம் என்னவென்றால், ஒவ்வொரு சொல்லுக்கும் பல்வேறு பொருள்கள் இருக்கின்றன என்பதுதான்.

"புராணங்களில் கூறப்படுகிற முறைப்படி ஒவ்வொரு இந்துவும் 'தர்ம'த்தைக் கடைப்பிடிக்க வேண்டும்,"

—என்றெல்லாம் பெருமையாக, சவமொழி குறித்துப் பேசப்பட்டிருக்கிறது, இந்த இருபதாம் நூற்றாண்டில்!

பேசியவர், பண்டகார், மடத்தைச் சேர்ந்த 'சுவாமிகள்' ஒருவர்!

அவரது பெயர், வித்யாமனிய தீர்த்தசாமியாம்!

பேசிய இடம் எது தெரியுமா? பெரம்பூரில் உள்ள இரயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலையில்!

எதன் சார்பில் தெரியுமா? அந்தத் தொழிற்சாலையில் ஒரு சவமொழி கற்றுத் தரும் பள்ளி இருக்கிறதாம்; அந்தப் பள்ளியில்தான் இப்படி எல்லாம் அளந்தாராம், 'சுவாமிகள்'!

உன்னிப்பாகக் கவனிக்கிறார்களாம்!

புதுடில்லி, ஏப். 26—

உணவுப் பொருட்கள், மற்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை நிலவரங்களை இந்திய அரசினர் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், நிலைமை கட்டு மீறிப் போய்விடாது என்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

'அரசியலாரிடம் போதிய அளவு அரிசி, கோதுமை தேக்கம் இருக்கின்றன; விலைகள் ஏறும் போது அவற்றைத் தாராளமாக சர்க்கார் விடுத்து வந்துள்ளனர்; 10 இலட்சம் டன் கோதுமை, அரிசி தேக்கி வைப்பதற்கான திட்டம் அமுல் செய்யப்படும் நிலையில் இருக்கிறது,' என்றும் செய்திகள் தெரிவிக்கின்றனவாம். ஏற்கனவே 5 இலட்சம் டன் கோதுமை அயல் நாடுகளில் வாங்கப்பட்டிருக்கிறது. அடுத்த 6 திங்களுக்குள் அந்த கோதுமை இந்தியாவுக்கு வந்து சேருமாம்.

கள்ளக் கடத்தல்களைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாம்.

ரஷ்யாவில் சம்பள வெட்டு

மாஸ்கோ, ஏப், 25—

ரஷ்யாவில் உயர்நீதி அதிகாரிகளுக்குத் தரப்படும் கொழுத்த சம்பளம் குறைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உயர்தர விஞ்ஞானிகள், மந்திரிகள் போன்றோரின் சம்பளத்தில் 50 சதவிகிதம்வரை வெட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

உலகக் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது

சோதனையற்ற ஆராய்ச்சியால் பலனேதும் கிடையாதாம்!

நீர்வளிக் குண்டுகள் சோதனையை அமெரிக்கா நிறுத்த வேண்டுமென்ற யோசனைகளை அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் நிராகரித்திருக்கிறார். இவ்வாயுதங்களை உலக அழிவுக்குப் பயன்படுத்துவதற்குப் பதில் இராணுவ ஆயுதங்களாகவோ, அல்லது பாதுகாப்பு ஆயுதங்களாகவோ பெருக்குவதற்குச் சோதனைகள் அவசியம் என்றும், சோதனையில்லாத ஆராய்ச்சிகளினால் பயனேதுமில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'ஐக்கிய அமைப்பில் தமிழர் தன்னுட்சி விருப்பை ஏற்கமுடியாது'

'ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரத்தை கூட்டலாம்'

'சிங்களத்தை ஆட்சிமொழியாக்கும் மசோதா விரைவில் உருவாகும்'

சிலோன் பிரதமரின் உள்நாட்டுக் கொள்கை!

"சிலோனை ஒரு ஐக்கிய ஆட்சியாக உருவாக்கி, அதில் தன்னுட்சி உரிமை கொண்ட தமிழ் ஆட்சி அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற ஐக்கியக் கட்சியின் கோரிக்கையைக் கண்டிப்பாக ஏற்க முடியாது. வேண்டுமானால், ஸ்தல ஸ்தாபன அமைப்பில் தன்னுட்சி உரிமை அளிக்கப்படுவதுடன், கோச்சி அறிக்கைப்படி, மாகாண அல்லது மண்டல அமைப்புகளை ஏற்படுத்தவும் முயற்சிக்கப்படும்.

"ஐக்கிய ஆட்சி முறையானது, முழு சிலோன் நாட்டிற்கோ, அல்லது தமிழர்களின் நலத்திற்கோ ஏற்றதாகாது,"

இவ்வாறு, சிலோன் புதிய பிரதமர் பண்டார நாயகா, தமிழர் தன்னுட்சி கோரிக்கைபற்றி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் ஆட்சிமொழி பற்றி கூறியதாவது:—

"சிங்களமொழி ஒன்று மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழி' என ஏற்கப்படும் மொழி மசோதா ஒன்று இரண்டொரு தினங்களில் உருவாக்கப்பட்டு விடும். அம்மசோதா இரண்டாவது மக்கள் சபைக் கூட்டத்தில் கொண்டுவந்து சட்டமாக்கப்படும்!"

பற்கள் கெடாமலிருக்க விஞ்ஞானி தரும் தகவல்

அட்லாண்டிக் நகரம், எப். 20—

பற்கள் கெடாமல் இருப்பதற்கு சிறுவயதிலிருந்தே தேநீர் அருந்தும் பழக்கம் ஏற்பட வேண்டுமென்று டாக்டர் ஜே எப். மக்ளெண்டன் என்ற விஞ்ஞானி சிபாரிசு செய்திருக்கிறார்.

தேநீர் தயாரிக்கப்படும்போது அதில் சர்க்கரை சேர்க்கப்படக் கூடாதென்றும், பால் வேண்டுமானால் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பறிகொடுத்த பகுதிகளைப் பார்வையிடுகிறார்களாம்!

சென்னை, எப். 25—

தெற்கில் தி. கொ.—சென்னை எல்லையில் குறிப்பாக செங்கோட்டைத் தாலுகா தகராறு சம்பந்தமாக தி. கொ. சர்க்கார் வகுத்துள்ள எல்லைக்கோட்டை பார்வையிடுவதற்காக மூன்று அதிகாரிகளை சென்னை சர்க்கார் நியமித்துள்ளது.

தோட்டக்காரர் பயிற்சி முகாம்

ரூ. 55,000 செலவில் அமையும்

ஜபல்பூர், எப். 23—

தோட்டக்காரர்களைப் பயிற்றுவிப்பதற்காக, மத்திய பிரதேச சர்க்கார் இரு பள்ளிகளைத் திறக்க முடிவு செய்திருக்கிறார்களாம்.

இங்கு பயிற்சிப் பெறுவோர், பொதுத் தோட்டங்களையும், பூங்காக்களையும் பாதுகாப்பவர்களாகப் பணி புரிவார்களாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அமையும் இந்தப் பயிற்சி, 12 மாதங்களுக்கு நீடிக்கும் என்றும், மாதந்தோறும் பயிற்சிப் பெறுவோருக்கு ரூ. 30 உபகாரச் சம்பளம் கிடைக்கும் என்றும் தெரியவருகிறது.

ஆண்டொன்றுக்கு 18 தோட்டக்காரர் வீதம் 5 ஆண்டுகளுக்கு ரூ 55,000 செலவில் பயிற்சி தரப்படுமாம்.

ஒருவர் எத்தனை குழந்தைகள் பெற ஆசை கொள்ளலாம்?

சென்னை, எப், 25—

மக்கட் தொகைப் பெருக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறதல்லவா? இதைத் தடுக்க எத்தனையோ வழிமுறைகள் பலராலும் கூறப்பட்டு வருகின்றன.

சென்னை சர்க்கார் கல்வி, சுகாதார இலாகா செயலாளர், 'ரோட்டரி' சங்கத்தில் பேசுகையில், ஒரு வழி கூறியிருக்கிறார்!

'ஒவ்வொருவருக்கும் தன்னடக்கம் வேண்டும்,' என்பதுதான் அந்த வழி!

'ஒவ்வொருவரும் மூன்று குழந்தைகளுக்குமேல் பெறவேண்டுமென ஆசைப்படக் கூடாது' என்று கூறினாராம், அவர்!

சகாரா பாலைவனத்தை முன்னேற்றத் திட்டம்

இரும்பு, நிலக்கரி, செம்பு, இயற்கை எரிவாயு, எண்ணெய் மாங்கனீஸ் ஆகியப் பொருள்கள் வளமுள்ள சகாராப் பாலைவனத்தை முன்னேற்றம் செய்வதற்கான திட்டம் ஒன்றை பிரெஞ்சு அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு அமைச்சர் ஒப்படைத்தார் என அறிவிக்கப்படுகிறது.

திருமணங்கள்

22-4-56 காலை 8 மணியளவில் சென்னை—குளே, கல்யாணமேன்திரி தோட்டத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில், தோழர் எசாம்பரம்—தோழியர் முத்துலட்சுமி திருமணம் நடைபெற்றது. தோழர் எ. கே. சாமி, வ. சங்கரநாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றி - பொறுப்பாளர்.

• • •

22-4-56 காலை 10-மணியளவில், சென்னை—பழைய வண்ணை, ஆரணி ரங்கய்யன் தெரு, எண் 81 இல்லத்தில், தோழியர் விமலா—தோழர் சம்பந்தம் திருமணம் தோழர் காஞ்சி-மணிமொழியார் தலைமையில் நடைபெற்றது: தோழர்கள் காஞ்சி - கல்யாணசுந்தரம், கோ. இளவரசு, சி. வி. ஆடலழகன், டி. ராசு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது —வரப்பெற்றோம்—நன்றி— பொறுப்பாளர்.

'வெளியேறுக! இன்றேல் பிரான்ஸ் மீதுபோர்தொடுப்போம்!'

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு விடுதலை இயக்க தலைவர் எச்சரிக்கை

கெய்ரோ, ஏப். 25—

அல்ஜீரிய மக்கள், பிரான்ஸ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திவரும் விடுதலைக் கிளர்ச்சி நாளுக்கு நாள் உரம்பெற்று வருகிறது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் மிருகத்தனமான கொடிய அடக்குமுறையையும் சமாளித்துக்கொண்டு வீரப்போர் புரியும் அல்ஜீரிய விடுதலை விரும்பிகள், தங்களின் மகத்தான தியாகம் வீண்போகாது என்ற நம்பிக்கையில், கிளர்ச்சியைத் தீவிரமாக்கி வருவதைக் காண்கிறோம்.

அல்ஜீரிய தேசிய இயக்கத் தலைவர்களுள் ஒருவரான பெர்ஹாத் அப்பாஸ் என்பார் இங்கு கடந்த வார இறுதியில் வந்திருக்கிறார் என்றும், ஏற்கனவே எகிப்தியத் தலைநகருக்கு வந்துள்ள இதர அல்ஜீரியத் தலைவர்களுடன் அவர் சேர்ந்துகொள்வார் என்றும் தெரியவருகிறது.

தோழர் அப்பாஸ், பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் மூட்டை முடிச்சுகளுடன் அல்ஜீரியாவைவிட்டு வெளியேறவேண்டும். பிரேஞ்சு இராணுவத்தின் கடைசி வீரன்கூட அல்ஜீரிய மண்ணில் இருக்கக்கூடாது; இன்றேல் நாங்கள், பிரான்ஸ் நாட்டின் மீது போர் தொடுப்போம்."

தோழர் அப்பாஸ், தேசிய இயக்கத்தவர் என்றாலும், இப்போது தீவிரவாதிகளுடன் ஒத்துழைக்கச் சம்மதித்திருக்கும் ஒரு 'சட்டமன்ற' உறுப்பினராவார்.

மாநில மாநாடு

அல்ஜீரியா - டுனீசியா - மொராக்கோ

எங்கும் விடுதலைக் கிளர்ச்சி

★

திராவிடம்

விடுதலை பெற - சமதர்மம் காண

அறப்போர் தொடுத்திடுவோம் வாரீர் திரண்டு!

திருச்சியில் மே 17,18,19,20-ல்!

நேருவின் பிடிவாதம் பிடிசாம்பலாகிறது!

மராட்டிய வீரர்தம் கிளர்ச்சிக்கு டில்லிப் பெரிய மனிதர்கள் பணிவு

பம்பாய் மராட்டியருக்குக் கிடைப்பது உறுதி!

புதுடில்லி, ஏப். 27—

'பெரிய மனிதர்'கள், தங்களை மறந்த நிலையில், எதையேனும் முடிவு செய்து கொண்டு அந்த முடிவை மக்கள் அனைவரும் ஏற்க வேண்டும் என்று விரும்புவர்! முடிவை எதிர்த்தாலோ, சீறுவர்! சினந்து கொள்வர்! தங்கள் 'பெரிய மனித'த் தன்மையைக் காட்டி எதிர்ப்பைச் சமாளிக்க எண்ணுவர்! ஆனால், பரிதாபத்திற்குரிய அந்தப் பெரிய மனிதர்கள், தாங்கள் பெரிய மனிதர்களானதே மக்களின் பெயரால்—மக்களால் என்பதை மறந்து விடுவர்! ஆனால், முடிவென்னவோ, மக்களின் விருப்பம்போல்தான் அமையுமே யல்லாது, பெரிய மனிதர்களின் பிடிவாதம் நீடிக்காது—நிலைக்காது என்பதே வரலாறு கூறும் தலையாய படிப்பினையாகும்.

பண்டித நேரு—இந்தியப் பிரதமர் கொள்ளும் பிடிவாதம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிடிசாம்பலாக்கப்பட்டுள்ளது ; அப்போதெல்லாம், 'குப்புறத்தான் கவிழ்த்து விட்டார்கள் ; ஆனால், மீசையில் மண் ஒட்டவில்லை, என்பது மட்டும் நினைவிலிருக்கட்டும்', என்று பேசுவார், அந்தப் பெரிய மனிதர்!

ஆந்திரம் கிடையாதென்றார்! பின்பு அமைத்துத் தந்தார்—பிடிவாதம் பிடி சாம்பலாயிற்று!

விசால ஆந்திரம் இல்லை என்றார்; 'அடம்' பிடித்தார்; தெலிங்கானாவை இணைத்து விசால ஆந்திரம் தர உறுதிமொழி, நகல் சட்டம் தந்துள்ளார்—பிடிவாதம் பிடி சாம்பலாயிற்று!

இப்படி எத்தனையோ சம்பவங்கள், இந்த ஒன்பதாண்டுக் காலத்தில்!

இப்போது, 'பம்பாய் மராட்டியருக்கு இல்லை" என்று அறிவித்தார்- 'நடுத்தெருவில் கிளர்ச்சி செய்வோருக்கு நடுத்தெருவிலேயே பதில் தருவோம்; என்று ஆணவம் பேசினர்' 'முடிவை மாற்றமாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தார்.

ஆனால்! ஆனல் என்ன?—பிடிவாதம் பிடி சாம்பலாகிறது! அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகர்கிறது. பெரிய மனிதர், இறங்கி வருகிறார்; ஆனால், குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாமல் பார்த்துக் கொள்ளவேண்டாமா?-என்று, இழுத்து இழுத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்.

மராட்டிய வீரர்கள், ஆயிரக்கணக்கில் சிறை புகுந்தவண்ணமுள்ளனர். தாய்மார்கள், போர்க்கொடி உயர்த்துகின்றனர்.

தாயகத்திற்காக, பெரும் பதவிகளைத் துச்சமென மதித்து, உதறித் தள்ளிவிட்டு, மார்தட்டிக் கேட்கின்றனர்—'பம்பாய் மராட்டியத்திற்கே' என்று!

மக்கள் சபையில் இடிமுழக்கம் கேட்கிறது.

கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் தர பண்டிதரின் பெரிய மனிதப் போக்கு இடம் தருவதில்லை என்பதைவிட, பதில் தர இயலவில்லை. அநீதியின் முழு உருவமும் அல்லவா, மக்கள் சபையில் கொண்டுவந்து நிறுத்தப்படுகிறது?

இப்போது, 'முடிவு இறுதியானதல்ல ; மாற்றுவதற்கு முயற்சிக்கிறேன் ; எல்லோரையும் திருப்திப்படுத்தும் வகையில் முடிவை மாற்றுகிறேன் ; பொறுத்திருங்கள் —அவசரப்படாதீர்கள் ; கிளர்ச்சி செய்யாதீர்கள் ; கணை தொடுக்காதீர்கள்,' என்று, மக்கள் சபை உறுப்பினர்களைக் கூட்டிவைத்துப் பேசியிருக்கிறார் பெரிய மனிதர் நேரு!

பிடிவாதம் பிடிசாம்பலாகிறது—மராட்டியர் விவகாரத்திலும்!

'பம்பாய் மராட்டியருக்குத்தான் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால், அதற்காக அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள், அவர்களின் கோரிக்கைக்கான நியாயத்தை பலவீனப்படுத்திவிட்டன,' என்று அந்தப் பெரிய மனிதர் கருதுகிறாராம்!

'மீண்டும் உங்களை அழைத்து இது குறித்துப் பேசுகிறேன்,' என்று உறுதி கூறியிருக்கிறாராம், மக்கள் சபை உறுப்பினர்களுக்கு!

'பம்பாய் குறித்த சிக்கலை அமைதியாகத் தீர்க்க விரும்புகிறேன் ; வழி காண்பேன்' என்றும் அவர் பேசியிருக்கிறார்.

'என்னை முகத்தைத் தொங்கப் போட்டுக்கொள்ளும்படியாக்கிவிட்டார்களே மராட்டியர்கள், என்றும் அவர் வருத்தப்பட்டாராம்!

'பம்பாய் மராட்டியத்திற்குத்தான்' என்று இப்போதே அறிவித்துவிட்டால், 'மராட்டியரின் கிளர்ச்சிக்கு நேரு பணிந்துவிட்டார்; நேருவின் முதுகிற்கு மராட்டியர் மண் காட்டிவிட்டனர்; நேருவின் மூக்கு உடைபட்டு அறுந்து தொங்குகிறது' என்று ஊரார்—அவர்கள் கிடக்கட்டும்—உலகத்தார் என்னைக் கேலி பேசுவார்களே, என் செய்வேன்? மீசையில் மண் ஒட்டவில்லை என்றேனும் கூறிக்கொள்ள வாய்ப்பு வேண்டாமா?—என்று நேரு சஞ்சலப்படுகிறாராம்!

'பம்பாய், மராட்டியருக்குத்தான்' என்ற மராட்டிய மக்களின் நியாயமான முடிவு, இன்றோ நாளையோ வெற்றி பெறப்போவதென்னவோ திண்ணம்—என்று பார்வையாளர்கள் கூறுகின்றனராம்.

செய்யக் கூடாதென......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் குரு ஒருவர், இந்தக் குல மக்கள் சீக்கிரமாக வாழ்க்கையில் முன்னேறுவதற்கு, இந்த ஐந்து கோட்பாடுகளையும் கூறினாராம். கூடியிருந்த 700 பேர்களும் இதனை ஏற்றுக் கொண்டார்களாம்.

சென்னை கிளைக் கழகங்களுக்கு :

"கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு மே விழாவை ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களும், சார்புக் கழகங்களும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி, வட்டப் பொதுமக்களுக்கு விளம்பரத்தாலும், விளக்கஉரையாலும் உணர்த்த வேண்டுகிறேன்.

"சென்னை மாவட்டக் கழகம், பொதுச்செயலாளரின் மே தினச் செய்தியை வழங்குவதற்காக மாபெரும் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. அன்று பகல் இரண்டு மணிக்கு இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து கிளம்பும் ஊர்வலத்தை எழுச்சியூட்டும் வகையிலும், மக்கள் சக்தியை காட்டுவதற்கான முறையிலும் —துணைக் கழகங்களாகிய மன்றங்களும், படிப்பகங்களும், கலையகங்களும், தொழிலாளர்களும் கழகக் கொடிகளுடன் கலந்துகொண்டு இவ்வணிவகுப்பை சிறப்பாக்கிக் காட்டுவதற்கு பெரிதும் ஒத்துழைக்குமாறு கிளைக் கழகங்கள் ஆவனசெய்ய வேண்டுகிறேன்"

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

பூவிருந்தவல்லி தி.மு. கழகத் தோழர்கள் வழக்கு நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

29—4—56 காலை 9-30 மணியளவில், பூவிருந்தவல்லி விக்னேசுவரா தியேட்டரில், தோழர் டி. இராசரத்தினம் தலைமையில், பூவிருந்தவல்லி தி. மு. கழகத் தோழர்கள் வழக்கு நிதிக்காக சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 'மக்கள் கவிஞர்' என்ற தலைப்பிலும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் 'கலையும்-வாழ்வும்' என்ற தலைப்பிலும் பேசுவர்.

நன்கொடை : ரூ. 1; பார்வையாளர் : அணா 8; பெண்கள் : அணா 4.

—பூவிருந்தவல்லி தி. மு கழகம்

கழகக் கூட்டம்

★

குடியேற்றம் (வ. ஆ.) : ஆற்றுத் திடலில்

1—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : கு. சி. பொன்னுசாமி

பேசுபவர் : என். வி. நடராசன்

பொருள் :—'மே தினத்தில் நாம்'

மே விழா பொதுக்கூட்டம்

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில்

1—5—56 செவ்வாய் மாலை 6 மணிக்கு

தலைவர் :

இளம்பரிதி

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

மே தினச் செய்தி வழங்குவார்

குறிப்பு : பிற்பகல் 2 மணிக்கு அறிவகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் கிளம்பி, முக்கிய தெருக்கள் வழியாக வந்து கூட்டத்தை அடையும்.

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

'தனி அரசு'

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை ஆசிரியராகக் கொண்டு, மாதமிருமுறை, 'கிரவுன்' அளவில், 6 பக்கங்களில், 2 அணா விலையில், மே மாதம் முதல் சென்னையிலிருந்து வெளிவரும்.

ஆண்டுச் சந்தா:—
உள்நாடு : ரூ. 3
வெளிநாடு : ரூ. 4

விவரங்களுக்கு : 'தனி அரசு', 131, பிராட்வே, சென்னை-1

சென்னை 42-வதுவட்ட தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு :

29—4—56 காலை 9 மணியளவில் கழகப் பணிமனையில் (நெ 4, நமசிவாயமுதலி தெரு, திருவல்லிக்கேணி) பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை 35-வதுவட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர்களுக்கு :

29—4—56 காலை 8 மணியளவில் 6/1, வெள்ளாளத் தெரு, புலியூர் — கோடம்பாக்கத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு :

30—4—56 மாலை 8 மணியளவில், கழகப் பணிமனையில் தோழர் ஐ. தேவராசன் தலைமையில் 'ஆரியமும்-திராவிடமும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

குள்ளம்பட்டி அழகிரி பாசறையில் வானொலி திறப்பு விழா

1—5—56-ல், குள்ளம்பட்டி (தி. மு. க. அலுவலகம்) அழகிரி பாசறையில், பொது மக்களால் நன்கொடையாக அளிக்கப்படும் ரூ. 750 மதிப்புள்ள வானொலியை, தோழர் எம். பி. சுப்ரமணியம் எம். எல். ஏ. திறந்துவைப்பார். தோழர் கிருஷ்ணன் தலைமை வகிப்பார். தோழர்கள் ப. இராமலிங்கம், ர. வரதராசன் மற்றும் பலர் பேசுவர்.

4-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

29—4—56 மாலை 6 மணிக்கு வேலூர் — அரசமரம்பேட்டை, கூடலூர் செங்கல்வராய முதலி வீதியில், தோழர் வி. ஜி சுப்பிரமணி தலைமையில், 4-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ச. செல்லப்பாண்டியன், க. நெடுஞ்சோழன், அ கருத்தோவியன் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

29—4—56 காலை 10 மணியளவில், சென்னை பிராட்வே, எண் 4/88-ஏ., 11-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில், தோழர் என். இராமதாசன் தலைமையில் நடைபெறும். 'பண்பு' என்ற பொருள்பற்றி கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

அண்ணு சொற்பொழிவு

சென்னை 16-வது வட்டம் வால்டாக்ஸ் ரோடு திடலில் (ஆனைக்கவுனி போலீஸ் நிலையம் அருகில்)

29—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : சி. பஞ்சாட்சரம்

பேசுவோர் :

அண்ணு
அரங்கண்ணல்
கோ. செங்குட்டுவன்

குறிப்பு:—கூட்டத்தில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 100 நிதியளிப்பாகத் தரப்படும்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஏப். 29 : மதுரை
மே. 1 : குடியேற்றம்
2 : காஞ்சிபுரம்
3, 4, 5 : திருச்சி
6 : பாலக்காடு

மதுரை மஜீத் நினைவுப் படிப்பக ஆண்டு விழா

29—4—56 மாலை 6 மணிக்கு, மஜீத் திடலில், மேற்படி படிப்பக 3-வது ஆண்டு விழா, தோழர் ச. எமராசன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் என். வி நடராசன், கே. எஸ். சந்தானம், பி. எஸ். இரத்தினம், வி. எஸ். மணி பேசுவர்.

உதவி நிதி நிறைவு விழா

சென்னை அஞ்சல் பிரிப்பகம் ஆர். எம் எஸ். நான்காவது வகுப்பு ஊழியர்கள் நிதியின் 6-ம் ஆண்டு நிறைவு விழா 29—4—56 ஞாயிறு மாலை 3 30 மணிக்கு சென்னை அஞ்சல் பிரிப்பகத்தில் நடைபெறும் தோழர் செ. மா. பரிபூரணம் தொடக்கவுரையாற்றுவார்; தோழர் இராச. சக்கரவர்த்தி தலைமை தாங்குவார்; தோழர்கள் என் ஜீவரத்தினம், முகவை-ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றுவர்.

பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகப் பொதுக்கூட்டம்

29-4-56 பிற்பகல் 3 மணிக்கு மேல், சென்னை சந்திரப்ப முதலி தெரு, எண் 19 இல்லத்தில், மேற்படி கூட்டம் நடைபெறும். மயிலை-சிவ. முத்து தலைமை வகிப்பார். தோழியர்கள் வெற்றிச்செல்வியார், கே. வி. சண்பகம், எம். விஜயலட்சுமி, பி. எம். வி. பரமேசுவரி, வ. பா. தாமரைக்கண்ணி, கலைச்செல்வி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். சண்முகானந்த சங்கீத கைத்தொழில் கலாசாலைக் குழந்தைகளால் ஆடல்பாடல் நிகழும்.

தம்மம்பட்டி தோழர்கள் வழக்கு விசாரணை

மே திங்களுக்கு மீண்டும் ஒத்திவைப்பு

பிப். 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தால் சம்பந்தமாக 16 தம்மம்பட்டி தோழர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில் தோழர் இராமலிங்கம் என்பவர் சேலம் அரசாங்க மருத்துவவிடுதியில் ஈண்டும் சிகிச்சை பெற்று வருகிறார்.

25—4—56ல் வழக்கு நடைபெற்றது. தோழர்கள் சார்பில் வழக்கை விவாதிக்க சேலம் வழக்கறிஞர் செட்டோ வந்திருந்தார். 15 தம்மம்பட்டி தோழர்களும் வழக்காட வந்திருந்தனர்.

அரசாங்கத் தரப்பில் தம்மம்பட்டி 'முன்சிப்பு'ம், ஓர் காங்கிரஸ் நபரும், போலீஸ்காரரும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

2—5—56-ந் தேதி வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கைக் கவனிப்பதற்காக தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ, ஜி. பி. சோமசுந்திரம், இராமலிங்கம், பி. எம். ரெங்கசாமி, கே. எஸ். மணி, ஏ. நாச்சிமுத்து ஆகியோரும், பெத்தநாயகன்பாளையம், முல்லைவாடி, நரசிங்கபுரம், உலிபுரம் தி. மு. க. தோழர்களும், இதரரும் வழக்கு மன்றத்திற்கு வந்திருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.